DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES,
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56

| **Spl S.CNo.** | **17/2022 (CC No.3/2018)** | Deposition of | **PW. 71** (LW. 277) |
|---|---|---|---|
| Name | Tr. Balachandru | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 11.07.2025.

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1 முதல் 5 எதிரிகளின் வழக்கறிஞர்களும் ஆஜராகியுள்ளார்கள்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 10.43 A.M**

நான் Mild Steel Fabrication தொழில் சுமார் 15 வருடமாக செய்து வருகிறேன். ஜுன் 2021 காலகட்டத்தில் நான் கோவையில் தான் தொழில் செய்து வந்தேன். 14.06.2021ல் எனக்கு பழக்கமான என் வீட்டின் அருகாமையில் உள்ள தனபால் த/பெ. சின்னசாமி என்பவர் தேசிய புலானய்வு முகமை போலீசார் விசாரணை செய்வதற்காக தன்னை அழைப்பதாகவும், என்னையும் உடன் வருமாறு அழைத்துச் சென்றார். 14.06.2021 அன்று மதியம் 12.00, 12.30 மணி அளவில் கோவைவில் PSR Groundல் உள்ள தேசிய புலானய்வு முகமை அலுவலகத்திற்கு சென்றோம். அப்போது தனபாலை உள்ளே அழைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள் நான் வெளியே அமர்ந்திருந்தேன். அப்போது மாலை சுமார் 4.30 மணி அளவில் போலீசார் என்னை உள்ளே அழைத்தனர்

நான் உள்ளே சென்றேன். தனபால் என் முன்னிலையில் PFI Kumbakonam Meeting சம்பந்தமான வீடியோ அடங்கிய சிடி ஒன்றை தேசிய புலானய்வு முகமை போலீசாரிடம் ஒப்படைத்தார். அதனை பெற்றுக்கொண்டதற்காக என்னை சாட்சி கையொப்பம் போடும் படி சொன்னார்கள். அதன்படி நான் அதில் சாட்சி கையொப்பம் இட்டேன். அந்த இரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த Seizure Memo **அ.த.சா.ஆ 270** ஆகும். அந்த குறுந்தகடு **அ.த.சா.ஆ 271** ஆகும். அந்த குறுந்தகட்டிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன். தேசிய புலனாய்வு முகமை போலீசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**முதல் விசாரணை முடிவடைந்த நேரம்10.55 A.M**

**குறுக்கு விசாரணை**

///அ.த.சா.ஆ 271 குறுந்தகட்டின் நகலை எதிரிகளுக்கு வழங்குவதற்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்டுகிறது.///

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Sd/- (S. MALARVIZHI)
District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.